இந்த மொழிபெயர்க்கப்பட்ட திட்டத் தரவுத் தாள் (PDS) 16 ஒக்தோபர் 2017 திகதியிடப்பட்ட ADB.org இல் உள்ள அதன் ஆங்கிலப் பதிப்பினை அடிப்படையாகக் கொண்டது.

ADB ASIAN DEVELOPMENT BANK

# இலங்கை: கூரைமேல் சூரிய மின் உற்பத்தித் திட்டம்

| | |
|---|---|
| **திட்டத்தின் பெயர்** | கூரைமேல் சூரிய மின் உற்பத்தித் திட்டம் |
| **திட்ட இலக்கம்** | 50373-002 |
| **நாடு** | இலங்கை |
| **திட்டத்தின் நிலை** | ஒப்புதலளிக்கப்பட்டது |
| **திட்ட வகை/ உதவி நடைமுறை** | கடன்<br>தொழில்நுட்ப உதவி |
| **நிதியிடல் மூலம்/ தொகை** | **கடன் 3571-SRI: கூரைமேல் சூரிய மின் உற்பத்தித் திட்டம்**<br>சாதாரண மூலதன வளங்கள் — US$ 50.00 மில்லியன்<br>**TA 9389-SRI: கூரைமேல் சூரிய மின் உற்பத்தித் திட்டத்திற்கு அமுலாக்கல் ஆதரவு**<br>தூய சக்தி நிதியிடல் கூட்டாண்மையின் கீழான ஆசிய தூய சக்தி நிதியம் — US$ 1.00 மில்லியன் |
| **மூலோபாய செயற்பட்டியல்** | சுற்றுச்சூழல் பேண்தகு வளர்ச்சி<br>உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சி |

| | |
|---|---|
| **மாற்றத்திற்கான இயக்கிகள்** | ஆளுகை மற்றும் திறன் மேம்பாடு<br>அறிவுசார் தீர்வுகள்<br>கூட்டாண்மை<br>தனியார்த்துறை அபிவிருத்தி |
| **துறை / உபதுறை** | **சக்தி** – புதுப்பிக்கத்தக்க சக்தி பிறப்பாக்கம் - சூரியசக்தி |
| **பால் சமத்துவம் மற்றும் பெருவோட்டத்தில் இணைதல்** | சில பால் மூலங்கள் |
| **விவரணம்** | சூரிய மின்வலு உற்பத்தியை அதிகரிப்பது மற்றும் சூரிய சக்தி நிகழ்ச்சித்திட்டத்திற்கான போராட்டத்தின் அமுலாக்கத்தினைத் துரிதப்படுத்துவதற்கு, நிறுவன மற்றும் உள்ளூர் வாடிக்கையாளர்கள் கூரைமேல் சூரிய ஒளி மின்னமுத்த (PV) பிறப்பாக்கி வசதிகளை நிறுவுவதற்கு நிதியிடுவதற்கு கடன் வசதியொன்றினை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் ADB யினைக் கோரியது. கூரைமேல் சூரிய மின்கலங்களை நிறுவுவதில் பெறுமதி சேர்க்கும் சூரியசக்தி புதுப்பிக்கத்தக்க வளங்களின் மேம்பாட்டினை ஊக்குவிக்கும் தொழில்நுட்ப மற்றும் வர்த்தகக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்படும். இந்தக் கடன் வசதி கூரைமேல் நிறுவப்படும் சூரிய மின் உற்பத்தி மேம்பாட்டினை ஊக்குவிக்குமாறு விருப்பத்திற்குரிய விதிமுறைகளுடன் தேவையான நிதியிடலை வழங்கும். இந்தத் திட்டத்தின் ஒரு பகுதியாக, கூரைமேல் சூரிய மின் உற்பத்தித் தொகுதிகளுக்கான தொழில்நுட்ப வழிகாட்டிகள் மற்றும் தரநிலைகள் ஏற்படுத்தப்படும்.<br><br>இந்தத் திட்டத்தின் வருவிளைவுகள்: (i) கூரைமேல் சூரிய மின் உற்பத்திக்கான கடன் நிதியிடல் அதிகரிக்கப்பட்டிருத்தல், (ii) கூரைமேல் நிறுவப்படும் சூரிய மின்கல சந்தை உட்கட்டமைப்பு மற்றும் வங்கியிடக்கூடிய உப திட்ட வழி ஏற்படுத்தப்பட்டிருத்தல்; மற்றும் (iii) இலங்கை மத்திய வங்கி, பங்கேற்கும் நிதி நிறுவனங்கள் (PFIs), வர்த்தக மற்றும் உள்ளூர் துறை வாடிக்கையாளர்கள் உட்பட பங்குதாரர்களின் திறன் மற்றும் விழிப்புணர்வு அதிகரிக்கப்படல் என்பனவற்றினை உள்ளடக்குகின்றது.<br><br>இந்த வருவிளைவுகள் பின்வரும் விளைவினை ஏற்படுத்தும்: தூய, நிலைபேறான மின் உற்பத்தி மேம்படுத்தப்பட்டிருத்தல். இந்தத் திட்டம் பின்வரும் தாக்கத்துடன் இசைவாக்கப்பட்டிருக்கும்: இலங்கையில் 2020 ஆம் ஆண்டளவில், தூய மற்றும் நம்பகரமான மின்சார வழங்கலிற்கான அணுகல் அதிகரிக்கப்பட்டிருத்தல் (இலங்கை 2015 2025 ஒரு அறிவுசார் அடிப்படையிலான பொருளாதாரத்திற்கு இலங்கை எரிசக்தித் துறை அபிவிருத்தித் திட்டம்). |

| | |
|---|---|
| **திட்டத்தின் காரண விளக்கமும் நாடு/ பிராந்திய மூலோபாயத்திற்கான தொடர்பும்** | இலங்கை அதன் சக்தித் துறையின் செயலாற்றலை மேம்படுத்தியுள்ளதுடன் 1990 ஆம் ஆண்டில் 29% ஆகவிருந்ததுடன் ஒப்பிடும்போது 2015 ஆம் ஆண்டில் 98.5% உடைய ஒரு தேசிய மின்மயமாக்கல் விகிதத்தினை எட்டியுள்ளது. எவ்வாறாயினும், விலையுயர்ந்த சுவட்டு எரிபொருள் சக்தியில் அதிகம் தங்கியிருக்கும் நிலை தொடர்கின்றது. துறைசார்ந்த சவால்கள் நீண்ட கால நிலைபேற்றினை அடைதல் மற்றும் குறைந்த விலை மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க நம்பகரத்தன்மையுடன் மின்சாரத்திற்கான அதிகரித்து வரும் தேவையை ஈடுசெய்வதனை உள்ளடக்குகின்றது. மின் உற்பத்திக் கலவையில் அனல் மின் சக்தியின் பங்கு (17% எண்ணெய் எரியூட்டப்பட்டும் 34% நிலக்கரி எரியூட்டப்பட்டும் பிறப்பிக்கப்படுவன உட்பட, 2015 ஆண்டில் 51%) ஒரு உயர்ந்த செலவுத் தளத்தை ஏற்படுத்துவது சக்திப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கு நீண்ட காலத்தில் ஒரு சாத்தியமானதும் நிலைபேறானதுமான ஒரு தீர்வாகாது. காற்று மற்றும் சூரிய சக்தி போன்ற, புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களின் பன்முகத்தன்மை நாட்டினது எரிசக்திப் பாதுகாப்பு மற்றும் சுற்றுச்சூழலை மேம்படுத்தும். இலங்கை அரசாங்கம் சுதேச எரிசக்தி வளங்களின் நிலைபேறான அபிவிருத்தியை உறுதிப்படுத்துதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மூலங்கள் ஏற்படுத்தப்படுவதனை ஊக்குவிப்பது என்பதனை இலக்காகக் கொண்டிருக்கின்றது. அரசாங்க குறிக்கோள்கள், ஏனையவற்றுக்களுக்கு இடையே, 2020 ஆம் ஆண்டளவில் பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்தான சக்தி வழங்கலின் பங்கினை 20% ஆக அதிகரிப்பதனை உள்ளடக்குகின்றது. பாரம்பரியமற்ற புதுப்பிக்கத்தக்க சக்தி மூலங்களிலிருந்தான 20% மின் உற்பத்தி அதிகரிப்பு பாரம்பரியமான நீர் மின் உற்பத்தியின் 37% (2015) உடன் சேர்ந்து எதிர்காலத்தில் கணிசமான அளவு மின்சாரம் தூய சக்தி மூலங்களிலிருந்து உற்பத்தி செய்யப்படுவதனை உறுதிப்படுத்தும். இலங்கையின் தேசிய ரீதியாக நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்புகள் சக்தித் துறையில் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உருவாக்கம் மற்றும் சக்தி வினைத்திறன் மேம்பாடு என்பனவற்றின் ஊடாக பச்சை வீட்டு வாயு உமிழ்வினை வழக்கமான வணிக சூழ்நிலைக்கு (அடிப்படை ஆண்டு 2013) எதிராக 20% இனால் (4% நிபந்தனையற்றும் 16% நிபந்தனையுடனும்) குறைப்பதனை இலக்காக் கொண்டிருக்கின்றது.<br><br>முன்மொழியப்பட்ட திட்டமானது நாட்டில் மின்சாரத்திற்கான அணுகலை விரிவாக்குதல், மின் உற்பத்தி கலவையை மேம்படுத்துதல் மற்றும் நிலைபேறான தூய சக்கியை உருவாக்குதல் ஆகிய அரசாங்கத்தின் இலக்கிற்குப் பங்களிப்புச் செய்யும். இது சூரிய சக்தி மூலம் தூய மின்வலு பிறப்பாக்கத்தினை அதிகரிக்கும் அரசாங்கத்தின் நிகழ்ச்சித்திட்டத்திற்கு ஆதரவளிக்கும். இத்திட்டம் ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) இலங்கைக்கான இடைக்கால நாட்டின் கூட்டாண்மை மூலோபாயத்துடன் இசைவானதாக உள்ளது. இது தூய மற்றும் நம்பகரமான மின்சாரத்திற்கான அணுகலை விரிவாக்குவது மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தியை மேம்படுத்துவது என்பனவற்றிற்கு அனுப்புதல் மற்றும் விநியோக முதலீடுகளுக்கு ஆதரவளிப்பதனை மையப்படுத்திய முன்னைய ADB யின் தலையீடுகள் மீது உருவாக்கப்படுகின்றது. |
| **தாக்கம்** | 2025 ஆம் ஆண்டளவில் இலங்கையில் தூய மற்றும் நம்பகரமான மின் விநியோகத்திற்கான அணுகல் அதிகரிக்கப்பட்டிருத்தல் |
| **திட்ட விளைவு** | |
| **விளைவு பற்றிய விபரணம்** | தூய மின் உற்பத்தி மேம்படுத்தப்பட்டிருத்தல் |

| | |
|---|---|
| **விளைவை நோக்கிய முன்னேற்றம்** | |
| **செயற்பாட்டு முன்னேற்றம்** | |
| **திட்ட வருவிளைவுகள் பற்றிய விபரணம்** | கூரைமேல் நிறுவப்படும் சூரிய மின் உற்பத்திக்கான கடன் நிதியிடல் அதிகரிக்கப்பட்டிருத்தல்.<br><br>கூரைமேல் நிறுவப்படும் சூரிய மின் உற்பத்தி உட்கட்டுமானத்திற்கான சந்தை மற்றும் வங்கியிடத்தக்க துணைத்திட்ட வழி ஏற்படுத்தப்பட்டிருத்தல்.<br><br>MOFMM, PFIs, மற்றும் வர்த்தக மற்றும் உள்ளூர் வாடிக்கையாளர்கள் உட்பட பங்குதாரர்களின் திறன் மற்றும் விழிப்புணர்வு அதிகரிக்கப்பட்டிருத்தல். |
| **செயற்பாட்டு முன்னேற்றத்தின் நிலை (வருவிளைவுகள், செயற்பாடுகள், பிரச்சினைகள்)** | |
| **பூகோளம்சார் அமைவிடம்** | |
| **பாதுகாப்பு வகைகள்** | |

| | |
|---|---|
| **சுற்றுச்சூழல்** | FI-C |
| **சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம்** | FI-C |
| **சுதேச மக்கள்** | FI-C |

**சூழல் மற்றும் சமுதாயம் சார்ந்த பார்வைகளின் சுருக்கம்**

| | |
|---|---|
| **சுற்றுச்சூழல் அம்சங்கள்** | |
| **சுயவிருப்பற்ற மீள்குடியேற்றம்** | |

**சுதேச மக்கள்**

**பங்குதாரர் தொடர்பு, பங்குபற்றல், மற்றும் ஆலோசனை**

**திட்ட வடிவமைப்பின் போது**

**திட்ட செயற்படுத்தலின் போது**

**வியாபார வாய்ப்புக்கள்**

| | |
|---|---|
| **ஆலோசனைச் சேவைகள்** | பொருத்தமற்றது |
| **கொள்வனவு** | பொருத்தமற்றது |
| **பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கி அலுவலர்** | காமுக்த்நொவ், முக்தோர் |
| **பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கித் திணைக்களம்** | தெற்காசியத் திணைக்களம் |
| **பொறுப்பான ஆசிய அபிவிருத்தி வங்கிப் பிரிவு** | சக்திப் பிரிவு, தெற்காசியத் திணைக்களம் |
| **நிறைவேற்று முகவர்கள்** | நிதி அமைச்சு<br>திறைசேரிக் கட்டம்<br>கொழும்பு-01<br>இலங்கை |

**கால அட்டவணை**

| | |
|---|---|
| **எண்ணக்கரு அனுமதி** | 17 மே 2017 |
| **உண்மை அறிதல்** | 16 மே 2017 முதல் 26 மே 2017 வரை |

| | |
|---|---|
| **MRM** | 25 ஜூலை 2017 |
| **ஒப்புதல்** | 26 செப்தெம்பர் 2017 |
| **கடந்த மீளாய்வுப் பணிநோக்கு** | - |
| **கடந்த PDS புதுப்பிப்பு** | 27 செப்தெம்பர் 2017 |

## கடன் 3571-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| ஒப்புதல் | ஒப்பமிடற் திகதி | நடைமுறைப்படுத்தற் திகதி | முடிவுத் திகதி | | |
|---|---|---|---|---|---|
| | | | மூலம் | திருத்தப்பட்டது | உள்ளபடியானது |
| 26 செப்தெம்பர் 2017 | - | - | 30 ஜூன் 2022 | - | - |

**நிதியிடல் திட்டம்** / **கடன் பயன்பாடு**

| | மொத்தம் (தொகை US$ மில்லியனில்) | திகதி | ADB | ஏனையோர் | நிகர சதவீதம் |
|---|---|---|---|---|---|
| திட்ட விலை | 59.80 | **ஒட்டுமொத்த ஒப்பந்த வழங்கல்கள்** | | | |
| ADB | 50.00 | 26 செப்தெம்பர் 2017 | 0.00 | 0.00 | 0% |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சரிநிரப்புக்கூறு | 9.80 | **ஒட்டுமொத்த கடன் வழங்கல்கள்** | | | |
| இணைநிதியிடல் | 0.00 | 26 செப்தெம்பர் 2017 | 0.00 | 0.00 | 0% |

TA 9389-SRI

**இலக்குக் கட்டங்கள்**

| **ஒப்புதல்** | **ஒப்பமிடற் திகதி** | **நடைமுறைப்படுத்தற் திகதி** | **முடிவுத் திகதி** | | |
|---|---|---|---|---|---|
| | | | **மூலம்** | **திருத்தப்பட்டது** | **உள்ளபடியானது** |
| 26 செப்தெம்பர் 2017 | - | - | 31 ஒக்தோபர் 2019 | - | - |

**நிதியிடல் திட்டம்/தொழில்நுட்ப உதவிப் பயன்பாடு** | **ஒட்டுமொத்த கடன் வழங்கல்கள்**

| **ADB** | **இணைநிதியிடல்** | **சரிநிரப்புக்கூறு** | | | | **மொத்தம்** | **திகதி** | **தொகை** |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | **அரசு** | **பயனாளர்கள்** | **திட்ட அநுசரணையாளர்** | **ஏனையோர்** | | | |
| 0.00 | 1,000,000.00 | 0.00 | 0.00 | 0.00 | 0.00 | 1,000,000.00 | 26 செப்தெம்பர் 2017 | 0.00 |

திட்டத் தரவுத் தாள்கள் (PDS) திட்டம் அல்லது நிகழ்ச்சித்திட்டத்தின் சுருக்கமான தகவலைக் கொண்டிருக்கின்றன: திட்டத் தரவுத் தாள் செயல்நிலையிலுள்ள வேலையாக இருப்பதனால், சில தகவல் இதன் முதற் பதிப்பில் உள்ளடக்கப்படாதிருக்கலாம் ஆனால் அது கிடைக்கப்பெறும் போது

சேர்த்துக்கொள்ளப்படும். முன்மொழியப்பட்ட திட்டங்கள் பற்றிய தகவல் தற்காலிகமானதாகவும் குறிப்பானதாகவும் உள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்தத் தகவல் தரவுத் தாளில் (PDS) உள்ளடக்கப்பட்டிருக்கும் தகவலை அதன் பயனர்களுக்கு எந்த விதமான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு வளமாக மட்டும் வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியானது உயர் தரமான உள்ளடக்கத்தினை வழங்க முயற்சிக்கும் அதே நேரத்தில், வெளிப்படையாகவோ அல்லது மறைமுகமாகவோ வியாபார உத்தரவாத வரையறைகள் இல்லாமை உட்பட, எந்த வகையான உத்தரவாதமும் இல்லாமல் ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்குப் பொருந்துமாறு உள்ளபடி வழங்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கி குறிப்பாக, அவ்வாறான எந்தத் தகவலினதும் துல்லியம் மற்றும் பூரணத்துவம் பற்றி எந்தவித உத்தரவாதங்களையோ அல்லது பிரதிநிதித்துவங்களையோ மேற்கொள்ளவில்லை.